பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை - 4

**29 12 2025** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று புதுச்சேரி பல்கலைக்கழக **30**வது பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகிறார்.

**2.** மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று அசாம் மாநிலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

**3.** கடந்த **11** ஆண்டுகளில் நாட்டில் சிவில் விமானப் போக்குவரத்து மிகப்பெரிய அளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

**4.** யுக்ரைன் மீது ரஷ்யா கடும் தாக்குதலை தொடுத்து வரும் நிலையில் அந்நாட்டு அதிபர் திரு. ஜெலன்ஸ்கி, அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்பை சந்தித்துப் பேசினார்.

**5.** உலக **Rapid Chess** சாம்பியன் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் புதுச்சேரி, கேரளா மற்றும் தமிழகத்தில் இன்றும் நாளையும் நடைபெற உள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

இன்று காலை புதுச்சேரி வரவுள்ள அவர், அங்கு மகாகவி பாரதியார் சிலையை திறந்து வைக்கிறார்.

பொலிவுறு நகரங்கள் திட்டத்தின்கீழ், வீட்டுவசதித் திட்டத்தையும் தொடங்கி வைக்க உள்ள அவர், புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் 30வது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

இன்று மாலை கேரளா செல்ல உள்ள அவர், அம்மாநில தலைநகர் திருவனந்தபுரத்தில் நடைபெற உள்ள கலாச்சார நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

நாளை கேரள மாநிலம் வர்கலாவில் நடைபெறும் 93வது சிவகிரி யாத்திரையில் பங்கேற்க உள்ள குடியரசு துணைத்தலைவர், திருவனந்தபுரத்தில் உள்ள மார் இவானி யோஸ் கல்லூரியின் பவள விழா கொண்டாட்டத்தின் நிறைவு நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார்.

அதன் பின்னர் நாளை மாலை ராமேஸ்வரத்தில் நடைபெற உள்ள காசி தமிழ்ச் சங்கமம் நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்ற உள்ளார்.

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று அசாம் மாநிலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

இரண்டு நாள் பயணமாக நேற்று அம்மாநில தலைநகர் குவஹாத்தி வர இருந்த அவர், அடர் மூடுபனி காரணமாக அவரது விமானம் ரத்து செய்யப்பட்டதால் இன்று வருகை தருகிறார்.

சட்டவிரோத குடியேற்றத்திற்கு எதிரான அசாம் போராட்டத்தின்போது உயிர்நீத்த தியாகிகள் நினைவாக குவஹாத்தியில் கட்டப்பட்டுள்ள நினைவிடத்தில் அவர் இன்று காலை அஞ்சலி செலுத்துகிறார்.

பின்னர் **Nagaon** மாவட்டத்தில் வைணவ துறவி சங்கர் தேவா பிறந்த இடமான **Batadrava-**வில் ஆன்மிக தலத்தின் மறுசீரமைப்பு திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

பின்னர் அங்கு நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் உரையாற்ற உள்ளார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் குவஹாத்தி திரும்பும் திரு. அமித் ஷா, நகரின் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் புதிதாக கட்டப்பட்டுள்ள காவல்துறை ஆணையர் அலுவலகத்தை திறந்து வைக்கிறார்.

<<<<>>>>

கடந்த 11 ஆண்டுகளில் நாட்டில் சிவில் விமானப் போக்குவரத்து மிகப்பெரிய அளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் பயணிகளின் குறைகளைக் களைய 24 மணி நேரமும் செயல்படும் குறை தீர்க்கும் மையத்தை தொடங்கியுள்ளதாக கூறினார்.

கடந்த மாதம் மட்டும் இந்த மையத்தின் மூலம் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகளின் குறை தீர்க்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சிவில் விமானப் போக்குவரத்துத் துறையின் செயலாளர் திரு. சமீர் குமார் சின்ஹா இந்த மையத்தை நாள்தோறும் பார்வையிட்டு செயல்பாடுகளை ஆய்வு செய்து பயணிகளின் குறைகள் விரைவாக தீர்க்கப்படுவதை உறுதி செய்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

ரயில்வேயில் குளிர்சாதன வசதி அல்லாத பெட்டியில் பயணிப்போருக்கும் வசதியான பயணத்தை ரயில்வே உறுதிப்படுத்தியுள்ளதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நடப்பாண்டில் ரயில்வே மேற்கொண்ட நடவடிக்கைளை அத்துறைக்கான அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

குளிர்சாதன வகுப்பு பயணிகளுக்காக படுக்கும் வசதியுடன் கூடிய 'வந்தே பாரத் ஸ்லீப்பர்' ரயிலை விரைவில் இயக்க ரயில்வே தயாராகி வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த **26** ஆம் தேதி நிலவரப்படி ரயில்வே மொத்தம் **164** வந்தே பாரத் ரயில் சேவைகளை இயக்கி வருகிறது.

மேலும், இந்த ஆண்டில் மட்டும் பிரதமர் திரு. நரேந்திர மோடி **25** ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள **42** திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்து, **13** திட்டங்களைத் தொடங்கி வைத்து, **21** திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியுள்ளதாகவும் ரயில்வே கூறியுள்ளது.

<<<<>>>>

நடப்பாண்டில் **272** கிலோமீட்டர் நீளமுள்ள உதம்பூர்-ஸ்ரீநகர்-பாரமுல்லா ரயில் இணைப்புத் திட்டம் நிறைவடைந்து நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டதாகவும், உலகின் சவாலான நிலப்பரப்புகளில் ஒன்றான இங்கு **36** முக்கிய சுரங்கப்பாதைகள் மற்றும் **943** பாலங்கள் கட்டப்பட்ட**தாகவும்** ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ரயில்வேயின் கொள்ளளவு மற்றும் செயல்திறனை அதிகரிக்க சரக்கு ரயில்களுக்கென தனிப்பாதைகள் அமைப்பதிலும், பொது-தனியார் பங்களிப்பு மாதிரிகளை ஊக்குவிப்பதிலும் அமைச்சகம் கவனம் செலுத்தி வரு**வதாகவும் ரயில்வே கூறியுள்ளது.**

<<<<>>>>

தலைநகர் தில்லியில் காற்று மாசைக் கட்டுப்படுத்த கான்பூர் ஐ.ஐ.டி.-யுடன் இணைந்து செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாக அம்மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. மஞ்ஜிந்தர் சிங் சிர்சா தெரிவித்துள்ளார்.

தில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாசு ஏற்படுவதற்கான ஆதாரங்களை நுணுக்கமான அளவில் கண்டறிதல், மாசின் தாக்கத்தை அறிவியல் ரீதியாக மதிப்பீடு செய்வது ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும் என்று கூறினார்.

காற்று மாசை தொடர்ந்து கண்காணித்து பகுப்பாய்வு செய்து முன்னறிவிப்புகளை வெளியிட்டு அதற்கேற்ப வழிகாட்டுதல்களைத் தொடர்ந்து வழங்கும் அமைப்பை உருவாக்குவதும் இதன் ஒரு பகுதி என்று அவர் தெரிவித்தார்.

காற்று மாசைக் கட்டுப்படுத்த தில்லியில் **250** சிறிய மற்றும் பெரிய கட்டுமான இடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், **6** ஆயிரம் கிலோ மீட்டருக்கும் அதிகமான சாலைகள் சுத்தம் செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

பங்களாதேஷில் உள்ள சிறுபான்மை இந்துக்கள் மீது நடைபெற்று வரும் தாக்குதல்களுக்கு அகில இந்திய ஷியா தனிநபர் சட்டவாரியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

லக்னோவில் நேற்று நடைபெற்ற வாரியத்தின் வருடாந்திர மாநாட்டில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அப்பாவி மக்கள் எவரையும் கொல்வதை இஸ்லாம் தடை செய்கிறது என்றும், மதத்தின் பெயரால் இத்தகைய செயல்களில் ஈடுபடுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பேசிய ஷியா தனிநபர் சட்டவாரிய பொதுச்செயலாளர் மௌலானா **Yasoob Abbas** உலகெங்கிலும் பயங்கரவாதத்தில் ஈடுபடுபவர்கள் மற்றும் அதனை ஆதரிப்பவர்கள் மனிதகுலத்தின் எதிரிகள் என்று கூறினார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேசம், பிஹார், ஹிமாச்சலப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா மற்றும் தலைநகர் தில்லியில் அடர்ந்த பனிமூட்டம் காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு இந்தியாவில் ஒடிசா மற்றும் மேற்குவங்கம் பகுதிகளில் இன்று அடர் பனிமூட்டம் நிலவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தில்லி, ஹரியானா, சத்தீஸ்கட், மத்தியப்பிரதேசம் மற்றும் பஞ்சாப் மாநிலங்களின் சில பகுதிகளில் குளிர்ந்த காற்று வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

உத்தரப்பிரதேசம், உத்தராகண்ட் மாநிலங்களில் இன்று மிக கடுமையான குளிர் நாளாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகளில் அடுத்த 2 முதல் 3 நாட்களுக்குள் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

யுக்ரைன் மீது ரஷ்யா கடும் தாக்குதலை தொடுத்து வரும் நிலையில் அந்நாட்டு அதிபர் திரு. ஜெலன்ஸ்கி, அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்பை சந்தித்துப் பேசினார்.

ஃபுளோரிடாவில் உள்ள திரு. ட்ரம்ப்பின் இல்லத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது ரஷ்யாவுடனான போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான அமெரிக்காவின் அமைதி திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த சந்திப்பு அற்புதமாக அமைந்ததாகவும், போரை நிறுத்த ரஷ்யா-யுக்ரைன் அமைதிப் பேச்சுவார்த்தையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

இரு நாடுகளும் போரை முடிவுக்கு கொண்டுவர விரும்புவதாகவும் அவர் கூறினார்.

இன்னும் சில வாரங்களில் அமைதிப் பேச்சுவார்த்தைகள் முழுமையடையும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த சந்திப்புக்கு இடையே இரு தலைவர்களும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடன் தொலைபேசி வாயிலாக உரையாடினர்.

வி.கே.-ஹா ஏர்நெட்-14

<<<<>>>>

உலக **Rapid Chess** சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Koneru Humpy,** அர்ஜுன் எரிகைசி ஆகியோர் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

தோஹாவில் நடைபெற்ற இப்போட்டியில் 11 சுற்றுகள் கொண்ட மகளிர் பிரிவில் கடைசி 3 சுற்றுகள் நேற்று நடைபெற்றன.

இதில் Koneru Humpy சீன மற்றும் ரஷ்ய வீராங்கனைகள் மூவரும் 8 புள்ளி 5 புள்ளிகளுடன் சமநிலையில் இருந்தனர்.

இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிப்பதற்காக நடத்தப்பட்ட டை-பிரேக்கரில் சீன வீராங்கனை ஜூ-ஜினெர் பட்டம் வென்றார்.

ரஷ்யாவின் கோரியாச் கினா வெள்ளிப் பதக்கத்தையும், கொனேரு ஹம்பி வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் பிரிவில் 10 புள்ளி 5 புள்ளிகளுடன் நார்வேயின் மேக்னஸ் கார்ல்சென் பட்டம் வென்ற நிலையில், 9 புள்ளி 5 புள்ளிகளுடன் அர்ஜுன் எரிகைசி வெண்கலப் பதக்கம் வென்றார்.

---------------

இலங்கைக்கு எதிரான நான்காவது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 30 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

திருவனந்தபுரத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 2 விக்கெட் இழப்பிற்கு 221 ரன் எடுத்தது.

Smriti Mandhana அதிரடியாக ஆடி 48 பந்துகளில் 80 ரன்னையும், Shafali Verma 46 பந்துகளில் 79 ரன்னையும் குவித்தனர்.

222 ரன் எடுத்தல் வென்றி என்ற இலக்கோடு பின்னர் விளையாடிய இலங்கை, 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 191 ரன் மட்டுமே எடுத்தது.

அருந்ததி ரெட்டி, வைஷ்ணவி ஷர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், ஸ்ரீசரணி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

------------

விஜய் ஹஸாரே கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழ்நாடு இன்று கர்நாடகாவை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் இன்று காலை 9 மணிக்கு இந்தப் போட்டி தொடங்குகிறது.

அலூரில் நடைபெறும் மற்றொரு போட்டியில் தில்லி - சௌராஷ்டிராவையும், ஜெய்ப்பூரில் நடைபெறும் ஆட்டத்தில் சத்தீஸ்கட் - மும்பையையும் எதிர்கொள்கின்றன.

**<<<<The End>>>>**